Agro Industries Corporation

*878 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Agro Industries Corporation Limited has come forward to sell Tractors, Power Drills, etc., from 20th September 1971 onwards at Guindy, Madras; and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) & (இ) பேரவையின் முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

டிராக்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலைகள்.

* 879. வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் தொழிற் கழகத்தின் சார்பில் டிராக்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலை தற்போது எங்கெங்கு துவக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கீழ்க்கண்ட இடங்களில் டிராக்டர் பழுது பார்க்கும் பட்டறைகள் (Workshops) துவக்கப்பட்டுள்ளன:—

காஞ்சிபுரம்.
திருச்சிராப்பள்ளி.
மதுரை.
சேலம்.
விழுப்புரம்.

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, இந்தப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை பெரும்பாலும் பெரிய நகரங்களில் இடம்பெற்று இருக்கின்றன. இப்போது ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு டிராக்டரோ, அல்லது 5 டிராக்டர்களோ இருக்கும் அளவுக்கு கிராமப்புறங்களில் அதிகமாக டிராக்டர்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். அதை முன்னிட்டு ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும், ஒவ்வொரு தொகுதியின் தலை நகரத்திலும் டிராக்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன் வருமா?

@ 369—374-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.